**கவனிக்க.-** *2019.09.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2141 - 2019 සැප්තැම්බර් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.12

*2141 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1546 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1584 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | 1589 |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்ட மூலம் 2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## ஹிக்கடுவ நகர சபை

தென் மாகாண அரச சேவை பதவி வெற்றிடம் நிரப்புதல்

*தென் மாகாண அரச சேவையில் ஹிக்கடுவ நகர சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிக்காக உரிய தகுதிகள் பூர்த்தி செய்திருக்கும் தென் மாகாணத்தினுள் நிரந்தர பதிவாளரிடம் விண்ணப்பப்பத்திரம் கோரப்படுகின்றன.*

| தொ. இல. | பதவியின் பெயர் | சேவைப் பிரிவு /தரம் | பதவி வெற்றிடம் | ஊதியங்கள் குறியீடு | சம்பள அளவு | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|---|
| 01 | தகனக்கூட இயக்கும் உதவியாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 01 | PL1-2016 | ரூ. 24,250-10X250-10X270-10X300-12X330-ரூ. 36,410 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் (02) இரண்டிற்கு திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடம் சித்தியடைந்திருத்தல். |
| 02 | நூல் நிலைய உதவியாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 01 | PL1-2016 | ரூ. 24,250-10X250-10X270-10X300-12X330-ரூ. 36,410 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் (02) இரண்டிற்கு திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடம் சித்தியடைந்திருத்தல். |
| 03 | வேலை/கள தொழிலாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 05 | PL1-2016 | ரூ. 24,250-10X250-10X270-10X300-12X330-ரூ. 36,410 | 08 ஆம் வகுப்பு (09 ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |
| 04 | சுகாதார தொழிலாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 05 | PL1-2016 | ரூ. 24,250-10X250-10X270-10X300-12X330-ரூ. 36,410 | 08 ஆம் வகுப்பு (09 ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |
| 05 | ஆயுர்வேத கலவையாளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெற்ற III தரம் | 01 | PL2-2016 | ரூ. 25,250-10X270-10X300-10X330-12X350-ரூ. 38,450 | (i) க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் இரு திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>(ii) மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதியில் கட்டாயமாக பதவிக்குரிய வக்வெல்ல முகாமைத்துவ மற்றும் பயிற்சி தாபனத்தால் நடாத்தப்படும் காலாண்டு பயிற்சி பாட நெறி பயின்று உரிய சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>(iii) உரிய தொழிலில் அனுபவம் மேலதிக தகுதியாகும் |

| தொ. இல. | பதவியின் பெயர் | சேவைப் பிரிவு /தரம் | பதவி வெற்றிடம் | ஊதியங்கள் குறியீடு | சம்பள அளவு | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|---|
| 06 | சாரதி III தரம் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 01 | PL3-2016 | ரூ. 25,790-10X270-10X300-10X330-12X350-ரூ. 38990 | (i) க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் இரு திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>(ii) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் ஜெனரால் வெளியிடப் பட்ட மோட்டர் வாகனம் ஓட்டும் அனு மதிப்பத்திரம் அனுபவம் தொடர் பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அந்த அனுமதிப் பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.<br>(iii) இதற்காக 2009 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கமுடைய போக்குவரத்துச் சட்டத்தின் 122 ஆம் பந்தியின் கீழ் DE அல்லது J தொகுதி அனுமதிப்பத்திரம், பெற்றிருத்தல் கட்டாயம் இல்லை. என்றாலும் அதன் சட்டத்தில் குறிப்பிட்ட காரணி மற்றும் அது சம்பந்தமாக எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கு கீழ்படிதல் வேண்டும். |

02. **வயது எல்லை :**

(i) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு வயது 18 இக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

(ii) தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் கடைமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச நிலை வயது பற்றிய பாதிப்பு ஏற்படாது.

03. **பொதுத் தகுதிகள் :**

(i) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருட காலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (ஹிக்கடுவ நகர சபை அதிகாரப் பகுதியில் வதிவாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

(ii) விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பதாரர் தண்டனை குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;

(iv) ஹிக்கடுவ நகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவாளர் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில் இந்த தாபனத்தில் தற்காலிக/ அமைய/ ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் விண்ணப்பதாரருக்கு விஷேட முன்னுரிமை அளிக்கப்படுவதுடன் அவர்கள் தாபன அதிகாரி மூலம் தனது விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்;

(v) விண்ணப்பதாரர்கள் உரிய பதவிக்கு முன் குறிப்பிட்டு இருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். உங்களுக்குரிய ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக எதிர்காலத்ததில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் கீழ்படிதல் வேண்டும்;

(ii) விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும்;

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 ஆண்டுகளுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருப்பின் தகுதிகாண் காலம் முடிவில் சேவையை நிரந்தரம் செய்யப்படும்;

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கூடுதலாக இலங்கை குடியரசின் தாபன ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் அரச திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், தென் மாகாண சபை, தென் மாகாண அரச ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சி தாபனத்திற்கு உரிய கட்டளைச் சட்டம், விதிகளும் ஒழுங்குகளும், ஏற்பாடுகளுக்கமைய ஹிக்கடுவை நகர சபை தலைவரால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கு கீழ்படிதல் சேண்டும்.

05. பொது நிபந்தனை :

(i) விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன்பின் அல்லது கோரப்படும் கால எல்லைக்கிடையில் இந்த ஆட்சேர்பை தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை ரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு ஹிக்கடுவ நகர சபையின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது;

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 மாதத்திற்குள் அரசாங்க வைத்திய பரிசோதனைக்கு உட்படிருப்பத்துடன் அந்த பரிசோதனையின் உடல் நல சம்பந்தமாக தகுதியற்றவராக காணப்படின் நியமனங்கள் இரத்து செய்யப்படும்.

06. ஆட்சேர்க்கும் முறை :

குறிப்பிட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர் நேர்முக பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

07. நேர்முக பரீட்சைக்கு புள்ளி பெற்றுக் கொடுத்தல் முறை :

(i) தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சி தாபனத்திற்குட்பட்ட " கனிஷ்ட சேவக ஆரம்ப தொழில்நுட்பம் சார்ந்த உத்தியோகத்தர்" சேவைப் பிரிவில்

| புள்ளிகள் வழங்கும் முக்கிய விடயங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| கல்வித் தகைமை | 30 | 50% |
| தொழில்முறை தகுதிகள் | 10 | |
| அனுபவம் | 10 | |
| சபை பகுதியில் வசிக்கும் (ஓர் ஆண்டுக்கு 05 புள்ளிப்படி) | 45 | |
| நேர்முக பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| மொத்தம் | 100 | |

**குறிப்பு -**

01. அடிப்படை தகுதிகளை பரிசோதித்தல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அடிப்படையாக கொண்டதாகும்.

02. அடிப்படை தகுதி பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதார்களுக்கிடையே நேர்முகப் பரீட்சையில் கிடைக்கப்பெற்ற புள்ளிகள் திறமை தொடர் முறை மற்றும் இருக்கும் வெற்றிடம் எண்ணிக்கையை பொறுத்து பதவிக்கு சேர்க்கப்படுவார்.

(ii) ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற சேவைத் தரம்

* விண்ணப்ப பத்திரம் கோரப்பட்டதன் பின் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் திறமையை உறுதிப்படுத்தும் பரீட்சையின் பெறுபேற்றின் படி ஆட்சேர்க்கப்படும்.

* இந்த சேவைப் பிரிவில் செய்யப்படும் அனைத்து நியமனம் ஆட்சேர்த்தல் இந்த ஒழுங்கு முறைப்படி சேவை சட்டவாக்கப்படி ஏற்பாடுகளின் பொருத்தமான படி மாத்திரம் இருத்தல் வேண்டும்.

* பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஒழுங்குகள்.

| | மதிப்பெண்கள் வழங்கும் முக்கிய விடயங்கள் | உச்ச மதிப்பெண் தொகை |
|---|---|---|
| 01 | க.பொ. (சா.த.) பரீட்சையில் சாதாரண சித்தியடைந் திருத்தல். | புள்ளி 8X1= புள்ளி 8 |
| 02 | க.பொ. (சா.த.) பரீட்சையில் சாதாரண சித்தியடைந் திருத்தல். | புள்ளி 8X2= புள்ளி 16 (உட்சபட்சம்) |
| 03 | க.பொ. (உ./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | புள்ளி 4 |
| 04 | தொழில் தொடர்பான அறிவு | புள்ளி 10 |
| 05 | நேர் முக பரீட்சையில் காட்டும் திறமை | புள்ளி 5 |
| 06 | தொழில் தொடர்பான பயிற்சி மற்றும் சேவை அனுபவம் பெற்றிருத்தல் | புள்ளி 15 (ஆண்டுக்கு புள்ளி 02 படி) |
| | முழுத் தொகை | புள்ளி 50 |

* தொழில் தேர்ச்சி பரிசோதனை

- ➢ இங்கு தொழிலுக்குரிய அறிவு பரிசோதிக்கப்படும்;
- ➢ சித்தியடைவதற்காக 40 % (புள்ளி 20 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்).

iii. ஆரம்ப மட்டம் அரை தேர்ச்சி பெற்ற சேவை தரம்

நேர்முக பரீட்சைக்கு புள்ளி பெற்றுக் கொடுத்தல் முறை புள்ளித்தொகை

| புள்ளிகள் வழங்கும் முக்கிய விடயங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| கல்வித் தகைமை | 30 | 50% |
| தொழில்முறை தகுதிகள் | 10 | |
| அனுபவம் | 10 | |
| சபை பகுதியல் வசிக்கும் (ஓர் ஆண்டுக்கு 05 புள்ளிப்படி) | 45 | |
| நேர்முக பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| மொத்தம் | 100 | |

08. விண்ணப்பப்பத்திர படிவத்தோடு பின்வரும் சான்றிதல்களின் நிழல் பிரதியை இணைக்க வேண்டும். முதல் பிரதியை நேர்முக பரீட்சைக்கு சமர்ப்பிக்க சேண்டும்.

- * பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;
- * தேசிய ஆளடையாள அட்டை;
- * பரீட்சை சான்றிதழ்/பாடசலையில் விலகும் சான்றிதழ்;
- * பதிவை உறுதிபடுத்தும் சான்றிதழ் (உரிய பிரதேச செயலாளர் கையொப்பமிடப்பட்ட 06 மாதத்திக்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதல்);
- * சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ் இரண்டு;
- * தொழில் மற்றும் சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருந்தால்);
- * வேறு தகுதிகள் சம்பந்தமான சான்றிதழ்.

09. விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பிக்க வேண்டிய முறை :

(i) இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமை உள்ளடக்கியவாறு 12'' x 8'' (A4) அளவுடைய கடதாசியில் இரு பக்கத்தையும் உபயோகித்து தன்னால் தயாரித்த விண்ணப்பப்பத்திரத்தை 2019.10.14 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன் 'தலைவர், ஹிக்கடுவ நகர சபை, ஹிக்கடுவ' என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்

பத்திரத்தை அனுப்பும் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரைகளுக்கு முறன்பாடான அல்லது முழுமையற்ற விண்ணப்ப பத்திரம் ஏதேனும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

(ii) தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் தமது தாபனத்தலைவர் மூலம் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

10. அடிப்படை தகுதிகள் சம்பூர்ண விண்ணப்பதார் மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

வினி காரியசம்,
தலைவர்,
ஹிக்கடுவ நகர சபை.

ஹிக்கமுவ நகர சபை
2019, ஓகத்து 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹிக்கடுவ நகர சபை ........................................................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ....................................................................................................

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள்: ..............................................................................................................

3. நிரந்தர முகவரி : ..................................................................................................................................................................

4. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் தொகுதி : ........................................................................
கிராம அலுவலர் பிரிவு : .........................................................................

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

6. பிறந்த திகதி : ஆண்டு : ............................. மாதம் : ............................ திகதி : ............................

7. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று உள்ளவாறான வயது :

வருடங்கள் : ............................ மாதங்கள் : ............................ நாட்கள் : ............................

8. திருமணமானவர்/ஆகாதவர் : ...........................................................................................

9. பால் (ஆண்/பெண் ) : .................................................................................................................

10. இனம் : ..........................................................................

11. நீர் இலங்கைப் பிரசையா ? : (பரம்பரையாகவா ? அல்லது பதிவு மூலமா என்று குறிப்பிடுக : ........................................

12. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? : .................................................

13. தொலைபேசி இல. : ...........................................................................................

14. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.த.)

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

க. பொ. த. (உ.த.)

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

தொழிற்தகைமையும் அனுபவமும் :

..................................................................................................................................................................................................

..................................................................................................................................................................................................

..................................................................................................................................................................................................

15. நீர் தற்போது ஹிக்கடுவ நகர சபையில் அல்லது தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின்

(i) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................

(ii) பதவி கிடைத்த திகதி : ..........................................................................

(iii) வகிக்கும் பதவியின் தன்மை : ..........................................................................
(தற்காலிக/அமைய/பதில்/ஒப்பந்த/பதிவு)

(iv) நீ ஏதாவது குற்றத்திற்காக நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? ..................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் கண்டுப்பிக்கப்பட்டால் நான் தகைமையற்றவன் ஆவேன் என்பதையும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எதுவித இழப்பீடும் செலுத்தாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

......................................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .................................

15. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவன தலைவரின் சான்றிதழ்

இந்த தாபனத்தில் .................................................... இல் பணிபுரியும் திரு./ திருமதி/ செல்வி .................................................. சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அலுவலக ஆவணங்களுக்கமைய சரியானவை என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுத்தால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

..............................................................................
தாபனத் தலைவரின் கையொப்பம்.

பெயர்: ..........................................................................................................
பதவி: ..........................................................................................
கையொப்பம் : ...............................................................................................................

09-511

---

**பேருவளை நகர சபை**

பேருவளை நகரசபையில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

1. **சேவை வகை மற்றும் பதவிப் பெயர்** : **முதல் நிலை தொழில்நுட்பம்சார் மின் தொழில்நுட்பவியலாளர் தரம்** III

2. வெற்றிட எண்ணிக்கை : 01

3. **தகைமைகள்**

3.1. கல்வித் தகைமை : க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்களுக்கு மேற்படாத வகையில் தாய்மொழி (சிங்களம் /தமிழ் மொழி) உள்ளடங்களாக இரு திறமைச் சித்திகள் (credit) உடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் குறைந்தது ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

3.2. தொழில்சார் தகைமை : பதவிக்கேற்றவாறு தகுந்த விதத்தில் தொழில்சார் அல்லது தொழில் முறைக்கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள தேசிய தொழில் தகைமை (N.V.Q) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவ மொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

குறைந்தபட்சம் ஒத்த துறையில் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (இதனை அரசின் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றின் சான்றிதழ் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.)

4. **அனுபவம்** :

4.1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு : பொருத்தமற்றது.

4.2. உள்ளக விண்ணப்பத்தாரிகளுக்கு : குறித்த உள்ளூராட்சி மன்றமொன்றில் முதல்தரத்தில் உள்ள பதவியொன்றில் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டு ஐந்தாண்டுகளுக்கு (5) குறையாமல் குறித்த திறமைசார் தடைப்பரீட்சையில் சித்தியடைந்து ஐந்து (5) ஆண்டுகள் வெற்றிகரமாக கடமையாற்றிருத்தல் வேண்டும்.

5. **சம்பளம்** :

5.1. சம்பளக் குறியீட்டு இலக்கம் : PL2-2016 (பொ.நி. சு: 03/2006 இற்கு அமைய)

5.2. சம்பள அளவுத்திட்டம் : ரூபா 25,250-10X270-10X300-10X330-12X350- ரூபா 38,450

6. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை** :

6.1. திறந்த ஆட்சேர்ப்பு :

6.1.1. எழுத்துப் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.2. தொழில்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.3. சாதாரண நேர்முகப் பரீட்சை : அடிப்படைத் தகைமை மற்றும் உடல்நிலை, பௌதிக உடல்நிலை என்பன அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது நடைபெறும்.

6.1.4. அமைப்பான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்த்தலின் போது தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமான கல்வித் தகைமைகள் | 20 | 50 |
| பொது அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

**குறிப்பு** : அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

06.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

06.2.1. எழுத்துப் பரீட்சை : (பொருத்தமற்றது)

06.2.2. தொழிற்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

06.2.3. சாதாரண நேர்முகப் பரீட்சை : அடிப்படை தகைமை மற்றும் உடல்நிலை, பௌதிக உடல்நிலை என்பன அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது நடைபெறும்.

06.2.4. அமைப்பான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உயர் புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்த்தலின் போது தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமான கல்வித் தகைமைகள் | 20 | 50 |
| பதவிக்கேற்ப செயல்முறை அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

**குறிப்பு** : அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

- உள்ளக விண்ணப்பதாரிகளினால் வெற்றிடங்களை நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

1. **சேவை வகை மற்றும் பதவிப் பெயர்** : **முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற பிரிவு - 02 தொழில்சார்/ துறை நிர்வாகி தரம் III**

2. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 02

3. **சம்பளம்**

3.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN1-2006

3.2 சம்பள அளவுத்திட்டம் : பொ.நி.சு. 03/ 2016 இற்கு அமைய
ரூபா 27,140-10X300-11X350-10X495-10X660 ரூபா 45,540

4. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை**

4.1 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

4.1.1 தகைமைகள் :

4.1.1.1 கல்வித் தகைமை : க.பொ.த (சா./த.) பரீட்சையில் இருஅமர்வுகளுக்கு மேற்படாத வகையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ் மொழி) மற்றும் கணிதம் உள்ளடங்களாக இரு (2) திறமைச் சித்தி (Credit) உடன் ஆறுபாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்)

4.1.1.2. தொழில் தகைமை : (பொருத்தமற்றது)

4.1.1.3. அனுபவம் : உள்ளூராட்சி மன்றமொன்றில் PL - 1 உம் PL - 2 சம்பளக் குறியீட்டின்கீழ் சம்பளம் பெறும் சேவை நிரந்தரமாக்கப்பட்டதுடன் நிரந்தரச் சேவைக்காலம் ஐந்து (05) ஆண்டுகள் பூர்த்தியானவர்களாக இருக்க வேண்டியதுடன் சேவைக் காலத்தை நிலையப் பொறுப்பதிகாரி மூலம் வெளிக்காட்டப்படல்/ உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

4.1.2. வயது : தற்போது உள்ளூராட்சி அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லைகள் பொருந்துவதில்லை.

4.1.3. சேர்த்துக்கொள்ளப்படும் விதம் :

4.1.3.1 எழுத்துப் பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உயர் புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| பொது அறிவு | 100 | 40% |
| துறைக்கு சார்பான அறிவைப் பரீட்சித்தல் | 100 | 40% |

**குறிப்பு** : எழுத்துப் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெறும் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக் கையின் இருமடங்கு அளவில் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அத்துடன், இவ்விரண்டிலும் உயர் புள்ளிகள் பெறுவதன் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்பச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

4.1.3.2. தொழில்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

4.1.3.3. சாதாரண நேர்முகப் பரீட்சை : (பொருத்தமற்றது)

4.1.3.4. கட்டமைப்பான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| கொண்டிருக்க வேண்டிய நிரந்தர சேவைக் காலத்துக்கு மேலதிகமாக உள்ள காலம் | 15 | 25 |
| இயங்குதல்/பணிபுரிதல் | 10 | |
| துறைசார் அறிவைப் பரீட்சித்தல் | 20 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 50 | |

**குறிப்பு** : சாதாரண நேர்முகப் பரீட்சையில் கருத்திற் கொள்ளப்படும் விடயங்களே இங்கும் கருத்திற்கொள்ளப்படும்.

4.2. **திறந்த ஆட்சேர்ப்பு**

4.2.1. தகைமைகள்

4.2.1.1. கல்வித் தகைமை : க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ்) உட்பட கணிதம் ஆகிய பாடங்களுடன் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்தி (credit) யுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடமாவது (பொது அறிவுப்பாடம் இல்லாமல்) சித்தியடைந்திருத்தல் இருத்தல்.

4.2.1.2. தொழில்சார் தகைமை : பொருத்தமற்றது

4.2.1.3. அனுபவம் : பொருத்தமற்றது

4.2.2. வயது :

4.2.2.1. குறைந்த எல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

4.2.2.2. கூடிய வயதெல்லை : 30 வருடங்களுக்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

4.2.3. சேர்த்துக் கொள்ளப்படும் விதம் :

4.2.3.1. எழுத்துப் பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உயர் புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| சவால்கள் மற்றும் அறிவைப் பரீட்சித்தல் | 100 | 40 |
| தற்கால விடயங்கள் தொடர்பான பொது அறிவு | 100 | 40 |

**குறிப்பு** : புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்கிற்கமைய உயர் புள்ளிகளை பெறுவதன் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

- உள்ளக விண்ணப்பதாரிகளினால் வெற்றிடங்களை நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

1. **சேவை வகை மற்றும் பதவிப் பெயர்** : **முதல் நிலை தொழில்நுட்பம்சார் தச்சுத் தொழிலாளர் தரம் III**

2. வெற்றிட எண்ணிக்கை : 01

3. **தகைமைகள்**

3.1. கல்வித் தகைமை : க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் தாய்மொழி (சிங்களம் /தமிழ் மொழி) உள்ளடங்களாக இரு (02) திறமைச் சித்திகள் (credit) உடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் குறைந்தது ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

3.2. தொழில்சார் தகைமை : பதவிக்கேற்றவாறு தகுந்த விதத்தில் தொழில்சார் அல்லது தொழில் முறைக்கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள தேசிய தொழில் தகைமை (N.V.Q) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவ மொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

குறைந்தபட்சம் ஒத்த துறையில் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (இதனை அரசின் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றின் சான்றிதழ் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.)

4. **அனுபவம்** :

4.1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு : பொருத்தமற்றது

4.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு : குறித்த உள்ளூராட்சி மன்றமொன்றில் முதல்தரத்தில் உள்ள பதவியொன்றில் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டு ஐந்தாண்டுகளுக்கு (5) குறையாமல் குறித்த திறமைசார் தடைப்பரீட்சையில் சித்தியடைந்து ஐந்து (5) ஆண்டுகள் வெற்றிகரமாக கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

5. **சம்பளம்** :

5.1. சம்பளக் குறியீட்டு இலக்கம் : PL2-2016 (பொ.நி. சு: 03/2006 இற்குஅமைய)

5.2. சம்பள அளவுத்திட்டம் : ரூபா 25,250-10X270-10X300-10X330-12X350- ரூபா 38,450

6. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை** :

6.1. திறந்த ஆட்சேர்ப்பு :

6.1.1. எழுத்துப் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.2. தொழில்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.3. சாதாரண நேர்முகப் பரீட்சை : அடிப்படைத் தகைமை மற்றும் உடல்நிலை, பௌதிக உடல்நிலை என்பன அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது நடைபெறும்.

6.1.4. அமைப்பான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்த்தலின் போது தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமான கல்வித் தகைமைகள் | 20 | 50 |
| பொது அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

***குறிப்பு*** : அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

06.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

06.2.1. எழுத்துப் பரீட்சை : (பொருத்தமற்றது)

06.2.2. தொழில்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

06.2.3. சாதாரண நேர்முகப் பரீட்சை : அடிப்படைத் தகைமை மற்றும் உடல்நலம் பௌதிக உடல் நிலை என்பனவற்றைப் பரிசோதித்தல் அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது நடைபெறும்

06.2.4. அமைப்பான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உயர் புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்த்தலின் போது தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமான கல்வித் தகைமைகள் | 20 | 50 |
| பதவிக்கேற்ப செயல்முறை அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

**குறிப்பு** : அமைப்பான நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

- உள்ளக விண்ணப்பதாரிகளினால் வெற்றிடங்களை நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

1. **சேவை வகை மற்றும் பதவிப் பெயர்** : **முதல்நிலை தொழில்நுட்பம் அல்லாத வேலை /துறைசார் ஊழியர் தரம் III**

2. வெற்றிட எண்ணிக்கை : 03

3. **தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமை : 08 ஆம் தரம் (ஆண்டு 9) சித்தியடைந்திருத்தல் வேண்டும்

3.2 தொழிற்தகைமை : பொருத்தமற்றது

4. அனுபவம் : பொருத்தமற்றது

5. **சம்பளம் :**

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் : PL1-2006 (பொ.நி. சு. 03/2016 இற்கு அமைய )

5.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 24,250-10X250-10X270-10X300-12X330 ரூபா 36,410

6. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை** :

6.1 திறந்த ஆட்சேர்ப்பு

6.1.1 எழுத்துப் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.2 தொழில்சார் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.3 சாதாரண நேர்முகப் பரீட்சை : (பொருத்தமற்றது)

6.1.4 அமைப்பான நேர்முகப் பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அமய/பிரதியீட்டு/ ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்துள்ள காலம் (ஆண்டொன்றிற்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | 50 |
| பதவிக்கு ஏற்ற அனுபவம் தொடர்பில் ஏதும் சான்றிதழ் | 05 | |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறையில் நிகழும் விடயங்கள் தொடர்பிலான அறிவு (பொது அறிவு) | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

**குறிப்பு :** அமைப்பான நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படும்

6.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு : பொருத்தமற்றது
6.3. திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு : பொருத்தமற்றது

**02. ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான பொது நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்ப முடிவுத்திகதியில் சம்பூரணமாக மூன்று (3) ஆண்டுகளுக்கு குறையாமல் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
3. பேருவளை நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் இருக்கும் வதிவிடகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பம் கையளிக்கப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும். (பதவிக்கு ஏற்ற விதத்தில் தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவருக்கு உயர் வயது எல்லை சேர்த்தலின் போது கருதப்படுவதில்லை)
5. விண்ணப்பதாரிகள் நன்னடத்தையுடையவராகவும் பதவியில் சேவை புரிய நல்ல சுகதேக உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
6. தண்டனைச் சட்டக் கோவையின் அடிப்படையில் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
7. அரசாங்கத்திலோ உள்ளூராட்சி மன்றமொன்றிலோ சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
8. பொது நிர்வாக சுற்று நிருப இல. 44/90 இன் கீழ் ஓய்வூதியம் பெற்ற ஒருவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
9. சேர்த்துக் கொள்ளப்படும் திட்டத்திற்கு அமைய முறையான நேர்முகப் பரீட்சையொன்றிற்கோ அல்லது செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கோ அல்லது திறந்த பரீட்சையொன்றிற்கோ ஈடுபடுத்துவதுடன் அங்கு பெறும் உயர் புள்ளிகளின் ஒழுங்கு முறைப்படி பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
10. ஒவ்வொரு பதவிக்கும் சேர்த்துக் கொள்ளத் தேவையான எல்லாவித குறைந்தபட்ச தகைமைகள் வர்த்தமானியில் குறிப்பிடப் படும் தினத்தில் எல்லா விதத்திலும் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. விண்ணப்பம் கோரிய பின்னர் அல்லது கோரப்படும் கால எல்லைக்குள் மேல்மாகாணத்தில் இப்பதவிகளுக்கு ஏற்ற ஆட்சேர்த்துக் கொள்ளப்படுதலைத் தாமதித்தல், மாற்றுதல் மற்றும் இவ்வறிவித்தலை செயலற்றதாக்குதல் அல்லது திருத்தம் செய்தல் போன்றன பேருவளை நகர சபைச் செயலாளரைச் சாரும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான பொது நிபந்தனைகள் :**

1. இவ்வேலை நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கேற்ப பங்களிப்புச் செலுத்த வேண்டும்.
2. அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க வேண்டும்.
3. பதவிகளை ஒத்த சம்பளப் பரிமாண அளவுக்கு 2016.01.01 இலிருந்து பொது நிர்வாகச் சுற்று நிருபம் இல. 3/2016 இன் II ஆம் அட்டவணைக்கு அமைவாகவே செலுத்தப்படும். இச்சம்பள அளவை முழுமையாக செயற்படுத்துவது 2020.01.01 இலிருந்தாகும்.
4. இதற்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகளுக்கும் மேல்மாகாண சபை அடிப்படை விதிக் கொள்கைகளுக்கும், மேல்மாகாண சபை ஆளுநரினால் வழங்கப்படும் ஒழுங்குகள் அல்லது ஆணைகளுக்கு மேல்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கூறியவாறு வழங்கப்படும் ஒழுங்குகள் அல்லது ஆணைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் ஆணைக்குழுக்கும் தாபனத் தலைவர்/பிரதானியினால் வெளியிடப்படும் ஆணைகளுக்கும் அமைய நடவடிக்கை மேற்கொள்ள/சேவையாற்ற வேண்டும்.

4. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தின் அடிப்படையில் A4 அளவிலான தாளில் விண்ணப்பமொன்றைத் தயாரித்து விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு 2019.10.04 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நகர சபை, பேருவளை " எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தற்போது அரசாங்க சேவையில்/உள்ளூராட்சி அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரியாயின் தமது விண்ணப்பத்தினை நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதியும் அனுப்பப்பட வேண்டும் :**

1. பிறப்புச் சான்றிதழ்;
2. தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி;
3. கல்விச் சான்றிதழ்/பாடசாலை விட்டு விலகிய சான்றிதழ்;
4. பிரதேச செயலளாரின் கையொப்பத்துடன் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்;
5. வேறு தகைமைகளை குறிப்பிடும் சான்றிதழ்;
6. சேவைக் காலத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்;
7. அண்மையில் பெற்றுக் கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு;
8. பொலிஸ் அறிக்கை.

வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு/செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வழைப்பை மட்டும் கொண்டு பதவியொன்றை பெற்றுக் கொள்ளப் பொருத்தமானவர் எனக் கருதிக் கொள்ள முடியாது.

இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில், அவ்வாட் சேர்த்தலை தாமதமாக்குதல் அல்லது மாற்றுதல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்யவோ அல்லது திருத்தம் செய்யவோ உள்ள பூரண அதிகாரம் என்வசமுள்ளதுடன் இவ்வாட் சேர்த்தல் தொடர்பில் ஒழுங்கு விதிமுறைகளில் இல்லாத எல்லாவிதமான காரணிகளினதும் இறுதி முடிவுகளும் பேருவளை நகர சபைச் செயலாளராகிய என் வசமே உள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதும் பொருத்தமின்மை ஏற்படின் சிங்கள மொழி பிரதியே சரியானது எனக் கருதப்படும்.

அசோக ரணசிங்க,
செயலாளர்,
பேருவளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
பேருவளை,
2019, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பேருவளை நகர சபையில் ...................................... பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :- .................................................................................................

2. நிரந்தர முகவரி :- .................................................................................................

3. கிராம அலுவலர் பிரிவு :- ..................................................................................................

4. மாவட்டம் :- ..................................................................................................

5. பிறந்த திகதி :- ஆண்டு .................... மாதம் ....................... திகதி .................

5. 1. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் (2019.10.04) வயது :- வருடங்கள் ................ மாதங்கள்................. நாட்கள்................

6. பால் : (ஆண்/பெண்) :- ..................................................................................................

7. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், பரம்பரையாகவா பதிவு செய்வதன் மூலமா? என்பது தொடர்பில் :- ..................................................................................................

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- .....................................................................................................

9. தொலைபேசி இலக்கம் :- .....................................................................................................

10. திருமணமானவர்/திருமணமாகாதவர் :- .....................................................................................................

11. கல்வித் தகைமைகள் :

11.1 விண்ணப்பதாரர் இறுதியாக சித்தியடைந்த வகுப்பு :- .....................................................................................................

11.2 க.பொ.த. (சா./த.) பரீட்சை :

(i) ஆண்டு :- ................................................. மாதம் :- .................................................

(ii) பரீட்சை சுட்டெண் :- .................................................

(iii) பெறுபேறுகள் :

| | பாடங்கள் | தரம் | | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 5. | | |
| 2. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 4. | | | 8. | | |

11.3. க.பொ.த. (உ./த.) பரீட்சை :- ..........................................................................................

(i) ஆண்டு :- .................................................. மாதம் :- ..................................................
(ii) பரீட்சை சுட்டெண்:-..................................................
(iii) பெறுபேறுகள் :-

| | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

12. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :- ..........................................................................................

13. வேறு தகைமைகள் :- ..........................................................................................

14. நீங்கள் எப்போதாவது குற்றச் சாட்டொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? இல்லையா ? என்பது பற்றி :- ..........................................................................................

15. நீங்கள் ஏற்கனவே இந்த நகர சபையில் நிரந்தர/பிரதியீட்டு/ அமய/தற்காலிக திட்ட அடிப்படையில் சேவை செய்பவரா? அவ்வாறாயின், அச்சேவைக் காலமும் விபரமும் :- ..........................................................................................

16. பதவி :- ..........................................................................................

17. சேவைக்காலம் :- வருடங்கள் .............. மாதங்கள் ............ நாட்கள்................

18. கடந்த (5) ஐந்து ஆண்டுகளில் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்குட்பட்டுள்ளீரா? :- ..........................................................................................

இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியிருக்கும் தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இவ்வாட் சேர்த்தல் நிபந்தனைகளுக்கு அமைய என்னால் தவறான/பிழையான தகவல்கள் தரப்பட்டிருப்பது தெரிய வந்தால் பதவியில் சேர்த்துக்கொள்ள முன்னராயின் பொருத்தமற்றவராகவும் பதவியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் எனின் சேவை நீக்கம் செய்யப்படுவதற்கும் நான் ஆளாவேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : .......................................

தற்போது அரசாங்க சேவையில் சேவை புரியும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திரு./ திருமதி/ செல்வி .......................................................................................................................... இந்நிறுவனத்தில் ........................................................... ஆக சேவையில் ஈடுபட்டுள்ளார். இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையான தண்டனைக்கும் உட்படவில்லை/உட்பட்டுள்ளார் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துவதுடன் முன் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து/செய்யாது முன்வைக்கிறேன்.

..........................................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி :- ..................................................................

09-657

## பேருவளை பிரதேச சபை

பதவி வெற்றிடங்கள் 01

மேல் மாகாண அரசாங்க சேவையின் பேருவளை பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க் காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் உள்ள தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. சேவை வகை மற்றும் பதவிப் பெயர் : ஆரம்ப தேர்ச்சி அற்ற சேவை வகையின் சுகாதாரத் தொழிலாளர் தரம் III**

2. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 12

3. சம்பள அளவுத் திட்டமும் குறியீடும் : PL-1-2016
ரூபா 24,250-10X250-10X270-10X300-12X330 - ரூபா 36,410
(2016 சம்பளத் திருத்தத்தின்படி 2019 ஆம் ஆண்டிக்குரிய ஆரம்ப சம்பளம் ரூபா 21,746 வாகும்.)

